Reg. No. : .....................

Code No.: SS32049 Sub. Code : J1TL21/S1TL21

UG (CBCS) DEGREE SPECIAL SUPPLEMENTARY EXAMINATION, April - 2020

Second Semester

PART – I – Tamil

Pothu Tamil – Paper II

(For those who joined in July 2016 onwards)

Time: Three hours Maximum: 75 marks

பகுதி — அ (10 X 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. சரியான விடையைத் தேர்ந்தெடுத்தெழுதுக.

1. அரக்கனார் அருவரை எடுத்தவன் அலறிட நெருக்கியவர் யார்?
   (அ) பிரம்மன் (ஆ) திருமால்
   (இ) சிவன் (ஈ) இந்திரன்

2. பெருமாள் திருமொழியைப் பாடியவர் யார்?
   (அ) நக்கீரர் (ஆ) குலசேகர ஆழ்வார் (இ) பெரியாழ்வார் (ஈ) திருப்பாணாழ்வார்

3. கீழ்க்காணும் சொற்களில் திருந்திய சொல்லைத் தேர்ந்தெடுக்க.
   (அ)அண்ணாக்கயிறு (ஆ) அர்ணாக்கயிறு (இ) அர்ணைக்கயிறு (ஈ) அரைஞாண்கயிறு

4. கீழ்வருவனவற்றில் பெயர்ச்சொல் எது?
   (அ) வந்தான் (ஆ) பாடியது (இ) குடம் (ஈ) செல்க

5. 'இலக்கிய விமர்சனத்தின் தத்துவங்கள்' என்ற நூலை எழுதியவர் யார்?
   (அ) அபர்க்ரோம்பி (ஆ) ரோமன் ரோலான் (இ) ஸ்மித் டன் (ஈ) பார்க்கர்

6. 'தெம்மாங்கு பாவலன்' என்று புகழப்படுபவர் யார்?
   (அ) பாரதியார் (ஆ) பாரதிதாசன் (இ) கவிமணி (ஈ) ந.பிச்சமூர்த்தி

7. கவிமணியின் தாய் பெயர் யாது?
   (அ ) தனலட்சுமி அம்மாள் (ஆ ) லஷ்மி அம்மாள்
   (இ) ஜெகதாம்பாள் (ஈ) ஆதிலட்சுமி அம்மாள்

8. பாலும் தேனும் பருகுவது போன்று கவிமணிக்கு ஆர்வத்தைத் தருவது எது?
   (அ ) வீணை மீட்டல் (ஆ) சாசன ஆராய்ச்சி
   (இ) மொழிபெயர்ப்பு (ஈ) பாடல் புனைதல்

9. பெரியபுராணத்தை இயற்றியவர் யார்?
   (அ) மாணிக்கவாசகர் (ஆ) திருநாவுக்கரசர் (இ) திருஞானசம்பந்தர்
   (ஈ) சேக்கிழார்

10. ஆசாரக் கோவையில் எத்தனை பாடல்கள் உள்ளன?
    (அ) 60 (ஆ) 80 (இ) 100 (ஈ) 120

## பகுதி — ஆ (5 X 5 = 25 மதிப்பெண்கள்)

வினா (அ) அல்லது (ஆ) தேர்வு செய்து எழுதுக.
அனைத்து வினாக்களுக்கும் 250 சொற்களுக்கு மிகாமல் விடை தருக.

11. (அ) திருஞானசம்பந்தர் இறைவனைப் பற்றி கூறும் கருத்துக்களைக் கூறுக.

(அல்லது)

(ஆ) நும் பாடப்பகுதியிலுள்ள திருநாவுக்கரசரின் பாடற்கருத்துக்களை விளக்குக

12. (அ) வினைச்சொல்லின் பொது இலக்கணத்தை வரையறை செய்க.

(அல்லது)

(ஆ) உரிச்சொல் பற்றி விளக்குக.

13. (அ) 'மனிதனைப் பண்படுத்துவது கலை' என்னும் கூற்றை நிறுவுக.

(அல்லது)

(ஆ) நம் வருங்காலப் பணிகள் பற்றி தனிநாயகம் அடிகள் கூறுவது யாது?

14. (அ) கவிமணியின் பிறப்பும் இளமையும் பற்றி எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) கவிமணியின் பெருமைகளுக்குரிய காரணங்களுள் ஒன்றாகக் கருதப்படும் அன்புடைமையை ஆராய்க.

15. (அ) இன்னா நாற்பது, இனியவை நாற்பது பற்றி விளக்குக.

(அல்லது)

(ஆ) முதலாழ்வார் மூவர் பற்றி எடுத்துரைக்க.

## பகுதி — இ (5 X 8 = 40 மதிப்பெண்கள்)

வினா (அ) அல்லது (ஆ) தேர்வு செய்து எழுதுக.
அனைத்து வினாக்களுக்கும் 600 சொற்களுக்கு மிகாமல் விடை தருக.

16. (அ) கள்ளுண்ணாமை பற்றி திருக்குறள் வலியுறுத்தும் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) நட்பாராய்தல் பற்றி நாலடியார் கூறும் செய்திகளைத் தருக.

17. (அ) பெயர்ச்சொல் என்றால் என்ன? அதன் வகைகளைச் சான்றுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) வினையெச்சம், வினைமுற்று பற்றி ஆராய்க.

18. (அ) நாயன்மார்களின் பக்திச் சிறப்பினைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) பழந்தமிழரின் பண்பாட்டுச் சிறப்புகளை ஆராய்க.

19. (அ) கவிமணியின் கல்வியும் தொழிலும் பற்றி விளக்குக.

(அல்லது)

(ஆ) கவிமணியின் பொதுநலத் தொண்டினை விளக்குக.

20. (அ) திருக்குறளின் பெருமைகளை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) சைவசமயக்குரவர் நால்வர் பற்றி விளக்கியுரைக்க.

----------